[1992 ஏப்ரல் 1

திரு. கி. பாலசுப்பிரமணியன் : இத்திட்டம் வரும் ஆண்டிலாவது நிறைவேற்றப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : நான் ஏற்கெனவே சொல்லி இருக்கிறேன். பொதுப் பணித் துறை பராமரிப்பில் இருக்கின்ற காரணத்தால் இறவைப் பாசனத் திட்டம் இன்றைக்கு ஆய்வில் எடுத்துக் கொள்ளப்படவில்லை. அப்படி ஏதாவது புதிய திட்டத்தை எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினரவர்கள் அதற்குரிய வழி வகைகளோடு இந்தத் துறையை அணுகினால், அந்தத் திட்டம் பற்றி ஆராயப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண், 426 திரு. செ.கு. தமிழரசன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

426—

வந்தவாசி நகருக்குக் குடிநீர் வசதி.

*144—திரு. செ.கு. தமிழரசன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

வந்தவாசி நகரத்தில் குடிநீர் பஞ்சத்தைப் போக்க விரைவில் நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா ?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வந்தவாசி நகரில் தற்போதைய மக்கள் தொகைக்கு நாள் ஒன்றுக்கு 11.50 இலட்சம் லிட்டர் நீர் தேவை என கணக்கிட்டு, 1990–91 ஆம் ஆண்டு வறட்சி நிவாரணப் பணியின்கீழ் கூடுதல் கொடு திறன் கொண்ட டர்பைன் மோட்டார் பொருத்தப்பட்டு தற்பொழுது நாள் ஒன்றுக்கு 12 இலட்சம் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

முற்பகல் 10–10

திரு. செ. கு. தமிழரசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது செய்யாறு நகரத்திலிருந்துதான் கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மூலம் வந்தவாசி நகருக்குத் தேவையான குடிநீர் சப்ளை செய்யப்படுகிறது. ஏறக்குறைய 15 கிலோ

1992 ஏப்ரல் 1]

மீட்டருக்கு மேலே அந்தக் கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மூலம் தண்ணீர் கொண்டு வரப்படுகிறது. வழியிலேயே பல இடங்களிலே அதை சேதப்படுத்தி அதிலிருந்து முறைகேடாக தண்ணீரை எடுத்து பயன்படுத்தி விடுகிறார்கள். வந்தவாசி நகருக்கு முழுவதுமாக அந்தத் தண்ணீர் வந்து சேருவதில்லை. வந்தவாசி நகருக்கு முழுமையாக ஒரு நாளைக்கு தேவையான தண்ணீர் தரப்பட முடியாமல் வாரத்திற்கு 2 முறை வாரத்திற்கு 3 முறை என்று தான் தண்ணீர் தந்து கொண்டிருக்கிறார்கள். எனவே அந்தக் கடுமையான குடிநீர் பஞ்சத்தைப் போக்குகின்ற வகையிலே வந்தவாசி நகரும் பயன் அடையும் வகையிலே பக்கத்திலே இருக்கிற கிராமங்களும் பயன் அடையும் வகையிலே அங்கே ஒரு புதிய திட்டத்தை உருவாக்கிட அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வந்தவாசி பேரூராட்சியில் எந்த வித பஞ்சமும் இல்லை. ஒழுங்காக முறையாக தண்ணீர் கொடுக்கப்பட்டு வருகிறது. தற்போது வந்தவாசியின் மக்கள் தொகை 25,500 பேர். நபர் ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு 40 லிட்டர் வீதம் $11\frac{1}{2}$ இலட்சம் லிட்டர் தண்ணீர் தேவைப்படுகிறது. வந்தவாசியின் குடிநீர் திட்டம் பேரூராட்சியின் பராமரிப்பில் உள்ளது. இத்திட்டத்திற்கு நீர் ஆதாரமாக செய்யாற்றில் கூடுதல் உறிஞ்சி கிணறு அமைக்கப்பட்டுள்ளது. 3.5 குதிரை திறனுக்குப் பதிலாக 30 குதிரைத் திறன் மோட்டார் பொறுத்தப்பட்டு தற்போது நாள் ஒன்றுக்கு 12 இலட்சம் லிட்டர் தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. செ. கு. தமிழரசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வந்தவாசி நகரில் குடிநீர் பொறுத்தவரையில் இப்போது கடுமையான மழை பெய்திருப்பதால் ஓரளவிற்கு தண்ணீர் பஞ்சம் தீர்ந்திருக்கிறது என்பது உண்மைதான். ஆனால் இனி வருகிற காலங்கள் கோடைக் காலமாக இருப்பதனால் மீண்டும் அந்தப் பஞ்சம் எழக்கூடும். அது மட்டுமின்றி பக்கத்திலே இருக்கிற கிராமங்கள் இந்தத் திட்டத்தின் மூலம் பலன் அடையாமல் இருக்கின்றன. எனவே பக்கத்தில் இருக்கிற, அருகாமையில் இருக்கிற கிராமங்களும் பயன் அடையும் வகையிலே இந்தத் திட்டத்தை விரிவு படுத்த முடியுமா என்று தான நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : அது பற்றி அரசு பரிசீலனை செய்து முடிவு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1992 ஏப்ரல் 1

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 427, திரு. ஆர். சிங்காரம், மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

427—

கூட்டுறவுச் சங்கங்களில் புதிய விவசாயிகளை உறுப்பினராகச் சேர்த்தல்.

* 7935—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கூட்டுறவுச் சங்கங்களில் விவசாயி அல்லாத உறுப்பினர்களை நீக்கிவிட்டு புதிய விவசாயிகளை உறுப்பினர்களாகச் சேர்த்து தேர்தல் நடத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

விவசாயி இல்லாத உறுப்பினர்களை கூட்டுறவுச் சங்கத்திலிருந்து நீக்குகின்ற செயற்குறிப்பு எதுவும் அரசிடம் இல்லை. தகுதி பெற்ற உறுப்பினர்கள் தற்போது கூட்டுறவுச் சங்கங்களிலே உறுப்பினர்களாக சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். கூட்டுறவுத் தேர்தலை நடத்துவதற்கு அரசு ஆவன செய்து வருகிறது.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சிக் காலத்தில் இந்தக் கூட்டுறவுச் சங்கத் தேர்தல் நடத்துவதற்காக பினாமி உறுப்பினர்களை சேர்த்திருக்கிறார்கள். வெவ்வேறு கிராமங்களிலிருந்து எல்லாம் ஆட்களைக் கொண்டு வந்து, புஸ்தகங்களை ஒன்றியச் செயலாளர் வீட்டில் வைத்துக் கொண்டு எழுதி, கையெழுத்துக்கூட போடாமல் உறுப்பினர்களைச் சேர்த்துதான் தேர்தல் நடத்தினார்கள் என்று பல முறை நான் பேசியிருக்கிறேன். நீங்களும் பதில் அளித்து இருக்கிறீர்கள். ஆனால் அந்த போலி உறுப்பினர்களை நீக்கிவிட்டுத்தான் தேர்தல் நடத்த வேண்டும். அப்போது தான் அது நன்றாக இருக்குமே தவிர, அந்த போலி உறுப்பினர்களை நீக்காமல் நடத்துவது முறையாக இருக்காது. ஆகவே அந்தப் போலி உறுப்பினர்களை நீக்குவதற்கு அரசு ஆணை பிறப்பித்து இருக்கிறதா ? அந்த உத்தரவு இது வரையில் வரவில்லை என்று சொல்கிறார்களே, அது அரசுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, 1990 ஆம் ஆண்டு நடைபெற்ற கூட்டுறவுத் துறை தேர்தலின்போது நிறைய போலி உறுப்பினர்கள் சேர்க்கப்